சாலைகளை - பள்ளமில்லா சாலைகளாகப் பராமரிக்க வேண்டும்!

# பாலப்பணிகளில் தனிக்கவனம் செலுத்திட வேண்டும்!

## ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!



சென்னை, பிப்.1-

நெடுஞ்சாலைத் துறையில் சாலைப்பணியாளர்களுக்கு மறுபணியமர்வு, உதவி வரைவாளர், இளநிலை வரைதொழில் அலுவலர் மற்றும் திறன்மிகு உதவியாளர் ஆகியோருக்கு பதவி உயர்வு வழங்கப்படும் என்று கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில் நெடுஞ்சாலைத் துறையில் சாலைகள், பாலங்கள் மற்றும் நிறைவு பெற்ற சாலைப் பணிகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவித்தார்.

சென்னை, கிண்டி நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தில், நேற்று (31.1.2024) நெடுஞ்சாலைத்துறையின் மூலம் நடைபெற்று வரும் சாலைகள், பாலங்கள் மற்றும் நிறைவு பெற்ற சாலைப் பணிகள் குறித்து, பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுகளில், நெடுஞ்சாலைத்துறையின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சாலைப் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொண்டார். 2022-2023 ஆம் ஆண்டில், 2,199 சாலைப் பணிகள் தொடங்கப்பட்டு, இதுவரை 1,989 பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

மேலும், 2023-2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 1,574 சாலைப் பணிகளில், 343 சாலைப் பணிகள் மட்டுமே முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள சாலைப் பணிகளை முடிக்க அனைத்து பொறியாளர்களும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

### விரைவாக ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட வேண்டும்!

அடுத்ததாக பாலங்கள் கட்டுமானப் பணிகளின் முன்னேற்றம் தொடர்பாக ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள் பருவநிலை மாற்றங்களால், அடிக்கடி மிக அதிகமான மழை பொழிகிறது. சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் வரலாறு காணாத கடும் மழை பெய்துள்ளது. பாலப் பணிகள் விரைந்து முடிக்கப்பட்டால்தான், பொது மக்களும், பள்ளிக்கூடம் செல்லும் மாணவர்களும் பாலங்களைப் பயன்படுத்தி மழைநீர் பாதிப்பின்றிச் செல்ல முடியும்.

2022-2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 60 பாலப் பணிகளில், இதுவரை 51 பாலப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. 2023-2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 186 பாலப் பணிகளில், 11 பாலப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. பாலப் பணிகளில் தனி கவனம் செலுத்தி விரைந்து முடிக்க வேண்டும். அடுத்த ஆய்வுக் கூட்டத்திற்குள் அனைத்துப் பாலப் பணிகளும் நிறைவு பெற்றதாக தெரிவிக்க வேண்டும் என்று அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

விரைவாக ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு பணிகள் தொடங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்திய அமைச்சர் அவர்கள், பணிகளின் முன்னேற்றம் குறித்து, கோட்டப் பொறியாளர்கள் புகைப்படத்துடன் அறிக்கை அனுப்ப வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேலும், மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகளையும் சீரமைத்து, போக்குவரத்து தங்குத்தடையின்றி செல்ல ஏதுவாக சரி செய்யப்பட வேண்டும்.

வெள்ளச் சீரமைப்புப் பணிகளுக்காக வெள்ளத்தால் பாதிப்படைந்த சென்னை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில், தற்காலிக சீரமைப்புப் பணிகளுக்கு ரூ.250 கோடியும், நிரந்தர சீரமைப்புப் பணிகளுக்கு ரூ.500 கோடியும் அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. தற்காலிக சீரமைப்புப் பணிகளை மார்ச் 2024க்குள் முடிக்கப்பட வேண்டும். நிரந்தர சீரமைப்புப் பணிகளை நான்கு மாதக் காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும் என்று அமைச்சர் எ.வ. வேலு உத்தரவிட்டார்.

சாலை விபத்துகளைத் தடுக்க ரூ.150 கோடி மதிப்பீட்டில், 561 சாலைப் பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்ளவும், சாலை சந்திப்புகளை ரூ.110 கோடி மதிப்பீட்டில் மேம்பாடு செய்யவும், அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இப்பணிகள் எல்லாம் விரைவாக முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள்.

### விபத்தில்லா தமிழகம்!

பொதுமக்களின் பாதுகாப்பினைக் கருதி, சாலை ஓரங்களில் உள்ள ஆபத்தான உடையும் நிலையில் உள்ள மரக்கிளைகளை உடனடியாக அகற்ற வேண்டும் என்றும், அனைத்துப் பணிகளுக்கும் பணப்பட்டுவாடா செய்யும் முன் தரக்கட்டுப்பாடுப் பிரிவு அலுவலர்களைக் கொண்டு, தரத்தினை உறுதி செய்து கொண்ட பின்னரே பணப்பட்டுவாடா செய்ய வேண்டும் என்றும், தரக்கட்டுப்பாட்டு அலுவலர்களின் அறிக்கையை அளவு புத்தகங்களில் (Measurement Book) பதிவு செய்ய வேண்டும்.

பணிகள் முடிக்கும் வரை, பள்ளமில்லா சாலைகளாகப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு அந்த ஒப்பந்ததாரருக்கு உள்ளது. அதை உறுதி செய்ய வேண்டியது, அந்த பொறியாளரின் கடமையாகும் என்று குறிப்பிட்ட அமைச்சர்; பணிகள் நடைபெறும் போது, சாலைப் பாதுகாப்புக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும், முதலமைச்சர் அவர்களின் "விபத்தில்லா தமிழகம்" என்ற இலக்கை அடைய சாலைகள் பள்ளமில்லா சாலைகளாகப் பராமரிக்கப்பட வேண்டும்.

### தயவு தாட்சண்யம் காட்டக் கூடாது!

"நம்ம சாலை செயலி" பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது. "நம்ம சாலை செயலி" மூலம் ஏதேனும் குறைபாடுகள் தெரிவிக்கப்பட்டால், உடனே சீரமைக்க வேண்டும். வரையறுக்கப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள் ஒப்பந்தப் பணிகளில் முன்னேற்றம் இல்லாவிட்டால், கால தாமதத்திற்கு ஒப்பந்த விதிகளின்படி, நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதில் எவ்வித தயவு தாட்சண்யம் காட்டக்கூடாது.

சாலைப் பணியாளர்கள் பல கோரிக்கைகளை அரசுக்கு சமர்ப்பித்துள்ளனர். அவற்றில் தகுதியான கோரிக்கைகளை பரிசீலித்து விரைவில் ஆணை பிறப்பிக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது முதன்மை இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியாளர் அலுவலகங்களில் உள்ள அலுவலக உதவியாளர்கள் காலிப் பணியிடங்களுக்கு சென்னை மற்றும் விழுப்புரம் வட்டத்தில் உள்ள 14 சாலைப் பணியாளர்கள் விருப்பத்தின் பேரில் அலுவலக உதவியாளராக மறு பணியமர்வு செய்யப்படுவார்கள்.

### இளநிலை வரைத் தொழில் பதவி உயர்வு!

கடந்த 7 வருடங்களுக்கு பிறகு நீண்டநாள் கோரிக்கையான இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு தற்போது தகுதி வாய்ந்த வரைவு அலுவலர், இளநிலை வரைதொழில் அலுவலர், திறன்மிகு உதவியாளர் நிலை-1 அவர்களுக்கு இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு வழங்கப்படும்.

நீண்டநாள் கோரிக்கையான இளநிலை வரை தொழில் அலுவலர் பதவி உயர்வு தற்போது தகுதி வாய்ந்த உதவி வரைவாளர் மற்றும் திறன்மிகு உதவியாளர் நிலை-1 அவர்களுக்கு இளநிலை வரைத் தொழில் பதவி உயர்வு வழங்கப்படும்.

இளநிலைப் பொறியாளர் பதவியில் உள்ள காலி பணியிடங்களுக்கு பதவி உயர்வு வழங்க திறன்மிகு உதவியாளர்களின் (RI) ஒருங்கிணைந்த முதுநிலைப் பட்டியல் விரைவில் முதன்மை இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்ப சம்பந்தப்பட்ட கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

ஊட்டுப்பதவியில் (Feeder Cateogry) இளநிலைப் பொறியாளர் பதவிக்கு தகுதி வாய்ந்த 34 நபர்கள் உள்ளனர். இளநிலை வரைதொழில் அலுவலர் பதவிக்கு தகுதி வாய்ந்த 95 நபர்கள் உள்ளனர். இவர்களுக்கு விரைவில் ஆணை வழங்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைத் துறை முதன்மை இயக்குநர் திருமதி. என்.சாந்தி, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் ஆர்.கோதண்டராமன், நெடுஞ்சாலைத் துறை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகின் தலைமைப் பொறியாளர் இரா.சந்திரசேகர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள், கோட்டப் பொறியாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோவை மு.தமீம்

**பிப்ரவரி 1 (2022)**



இளம்வயதிலேயே கொள்கையில் ஈடுபாடு கொண்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, மாநிலம் முழுவதும் கழகக் கொள்கைகளை பரப்பியவர்.

ஒன்றுபட்ட கோவை மாவட்டத்தில் வட்ட பிரதிநிதி, நகர துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகள் வகித்தவர்.

1984ஆம் ஆண்டு நடைபெற்ற புதுவையில் நடைபெற்ற மாநாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் படத்தை திறந்து வைத்தவர்.

1996ல் கோவை மாநகராட்சி உறுப்பினராக வெற்றி பெற்று, மாநகராட்சி பணி நியமனக்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

இந்து சமய அறநிலையத் துறையில் - செயல் அலுவலர் (நிலை - 3)

# பணியிடத்திற்குத் தேர்வு செய்யப்பட்ட 60 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார்.

சென்னை, பிப்.1-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (30.01.2024) ஆணையர் அலுவலகத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத்துறை செயல் அலுவலர் (நிலை - 3) பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 60 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் செயல் அலுவலர் (நிலை-3) பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 66 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் வகையில் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் 60 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, இந்து சமய அறநிலையத் துறையில் 705 அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 24 செயல் அலுவலர்கள் (நிலை -1), 66 செயல் அலுவலர்கள் (நிலை - 3), 2 செயல் அலுவலர்கள் (நிலை -4), 80 இளநிலை உதவியாளர்கள், 100 தட்டச்சர்கள் மற்றும் 32 சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் என 244 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. கருணை அடிப்படையிலான பணி நியமனங்களில் துறையில் 24 நபர்களுக்கும், திருக்கோயில்களில் 102 நபர்களுக்கும், பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதோடு, 110 விதியின்கீழ் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் தொகுப்பூதியத்தில் பணியாற்றிவந்த 1,287 பணியாளர்கள் பணி வரன்முறைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், செயல் அலுவலர் (நிலை -4) பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள 61 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்களால் விரைவில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட உள்ளன.

திருக்கோயில் திருப்பணிகள், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், சொத்துக்களை பாதுகாத்து பராமரித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வரும் செயல் அலுவலர் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்பிட திராவிட மாடல் அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இன்றைய தினம் பணி நியமன ஆணைகளை பெற்றுள்ள செயல் அலுவலர்கள் எல்லாம் நிலையிலும் இந்த அரசுக்கும், இந்து சமய அறநிலையத்துறைக்கும் நற்பெயரை ஈட்டித் தருகின்ற வகையில் செயலாற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டு மனமார்ந்த வாழ்த்துக்களை முதலமைச்சர் அவர்கள் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆகாய நடைமேம்பாலம்!

இந்த ஆட்சியை பொறுத்தளவில் மக்கள் நலனுக்கு ஏற்ற வகையில், சென்னை போக்குவரத்து நெரிசலை குறைத்திட திட்டமிட்டு பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம். போக்குவரத்தை சீரமைக்க கூடுதல் காவலர்களுடன் ஊர்க்காவல் படையினரையும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். கிளாம்பாக்கத்தில் புதிய காவல் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டுள்ள நிலையில் கிளாம்பாக்கத்தில் புதிய இரயில் நிலையம் அமைக்க இரயில்வே துறைக்கு ரூ.20 கோடி அளித்திருக்கின்றோம். ரூ.120 கோடி மதிப்பீட்டில் ஆகாய நடைமேம்பாலம் அமைத்திட ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது. சென்னை மாநகர போக்குவரத்து கழகத்தின் சார்பில் 200-க்கும் மேற்பட்ட பேருந்துகள் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்வதற்கு இயக்கப்பட்டுள்ளன. கூடுதல் பேருந்துகள் தேவைப்பட்டாலும் இயக்குவதற்கு தயாராக உள்ளதாக போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.



புதிதாக ஒரு கட்டமைப்பை உருவாக்கி திட்டத்தை செயல்படுத்துகின்ற போது சிறிய அளவிலான பிரச்சனைகள் எழுவது இயல்பான ஒன்று. அப்பிரச்சினைகள் அனைத்தையும் விரைவில் தீர்ப்பதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். பாரிமுனை மற்றும் எழும்பூரிலிருந்து கோயம்பேட்டிற்கு பேருந்து நிலையம் மாற்றப்பட்டபோது, முழுமையாக பேருந்துகள் இயக்கப்படுவதற்கு 6 ஆண்டுகள் ஆனது. ஆனால் தற்போது முதலமைச்சர் அவர்கள் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தை தொடங்கி வைத்த ஒரு மாதத்திற்குள் ஆம்னி பேருந்துகள் உள்பட அனைத்து பேருந்துகளையும் அங்கிருந்து இயக்குகின்ற வகையில் நடவடிக்கை எடுத்துள்ளோம். அரசின் துரித நடவடிக்கைக்கு இதுவே எடுத்துக்காட்டாகும்.

### மலிவு விலை உணவகம்!

கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் கழிவறைகள் கூடுதலாகவே அமைக்கப்பட்டு, அவற்றை பராமரிக்கவும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தனியார் உணவகங்கள் செயல்பாட்டில் உள்ளன. ஆவின் மூலம் 2 ஆவின் பாலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் மலிவு விலை உணவகத்தை ஏற்படுத்த முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதற்குண்டான அடிப்படை பணிகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன. அவசர மருத்துவ உதவிக்கு மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்பட்டு கட்டணமில்லாமல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மருந்து, மாத்திரைகளுக்கு மட்டுமே கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பயணிகளின் அனைத்து பிரச்சனைகளையும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமமும், போக்குவரத்துத் துறையும் இணைந்து முழுமையாக தீர்த்து வைப்போம்.

கோயம்பேடு பேருந்து நிலையமானது 51 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில் மக்களுக்கு பயன்படும் கட்டமைப்புகளோ, திட்டமோ செயல்படுத்தும்போது, கிளாம்பாக்கம் பேருந்து முனையத்தில் 6 ஏக்கரில் நீரூற்று பூங்காவும், 11 ஏக்கரில் காலநிலை பூங்காவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது போல் கோயம்பேட்டிலும் பசுமை பூங்கா ஏற்படுத்தப்படும். கோயம்பேடு பேருந்து நிலையத்தை பொறுத்தளவில் தற்போது தனியார் ஆலோசனை நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளோம். அதன் இறுதி அறிக்கை வந்தவுடன் முழுமையாக கூர்ந்து ஆய்வு செய்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, உரிய உத்தரவு பெற்று மக்களின் கருத்துகளை கேட்டறிந்த பிறகுதான் எவ்வித முடிவும் எடுக்கப்படும்.

கோயம்பேடு மார்க்கெட் நல்ல நிலையில் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு ஒரு லட்சம் வியாபாரிகளும், பொதுமக்களும் வந்து செல்லும் நிலையில் அங்கு கூடுதல் காவலர்களும், தூய்மைப் பணியாளர்களும் நியமனம் செய்து சிறப்பாக பராமரித்து வருகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் 100 ஜீன் 2023 முதல் ஜனவரி 2024 வரை 80 நிகழ்ச்சிகள் நிறைவு பிப்ரவரி 2024 மாத நிகழ்வுகள் 10



அமைச்சர் - மாவட்டச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

| வ.எண் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 1. 02/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 21.21A மலைக்கோட்டை பகுதி | எச்.முஹம்மது முபாரக் பி.ராஜா (எ) வரதராஜன் வட்ட கழக செயலாளர்கள் | தாம்பரம் ஜின்னா தலைமைக் கழக பேச்சாளர் |
| 2. 04/02/24 10.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பரப்பும் கழக நிர்வாகிகள் மற்றும் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களுடன் காணொளி வாயிலாக அரங்கம் அமைத்து கருத்தரங்கம் | மாவட்ட, மாநகர அயலகஅணி | சூ.அடைக்கலராஜா மாவட்ட அமைப்பாளர் கே.விஜயகோபால் மாநகர அமைப்பாளர் | கே.எஸ்.மஸ்தான் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எம்.எம்.அப்துல்லா M.P. மாநில அணி செயலாளர் கருத்தரங்கத்தில் உரையாற்றுபவர் ஐ.லியோனி கொள்கை பரப்பு இணை செயலாளர் |
| 3. 06/02/24 06.00 AM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும்மாரத்தான் போட்டி மற்றும் நலிந்த தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா | தொழிலாளர் முன்னேற்ற சங்கம் | எஸ்.ஜோசப் நெல்சன் மாவட்ட தொ.மு.ச.செயலாளர் | பேரவை எம்.சண்முகம் M.P. மாநில தொ.மு.ச.செயலாளர் சிறப்பு அழைப்பாளர் க.பொன்முடி கழக துணை பொதுச்செயலாளர் |
| 4. 10/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் பொதுக்கூட்டம் | மலைக்கோட்டை பகுதி கழகம் | மருந்துக்கடை ஆர்.மோகன் பகுதி கழக செயலாளர் | பி.கே.சேகர் பாபு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் |
| 5. 11/02/24 05.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் கல்வியாளர்கள் பங்கேற்கும் சொல்லரங்கம் | மாவட்ட, மாநகர வர்த்தக அணி | என்.செந்தமிழ் செல்வன் மாவட்ட அமைப்பாளர் ஜெ.சரவணன் மாநகர அமைப்பாளர் | கவிஞர்.காசிமுத்து மாணிக்கம் மாநில அணி செயலாளர் கல்வியாளர்கள் சிறப்புரை சு.வெங்கடேசன் M.P., வி.பொன்ராஜ் |
| 6. 16/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 34.34A பாலக்கரை பகுதி | நெ.சகாய மேரி சில்வியா த.கருணாநிதி வட்ட கழக செயலாளர்கள் | தக்கோலம் தேவபாலன் தலைமைக் கழக பேச்சாளர் |
| 7. 18/02/24 08.00 AM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு கல்வெட்டு அமைத்து மருங்காபுரி வடக்கு ஒன்றியத்தில்17ஊராட்சிகளிலும் கழக கொடியேற்றுதல் | மருங்காபுரி வடக்கு ஒன்றிய கழகம் | சி.செல்வராஜ் ஒன்றிய கழக செயலாளர் | மாவட்ட கழக செயலாளர் |
| 8. 18/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பரப்பும் பொதுக்கூட்டம் | மார்க்கெட் பகுதி கழகம் | ஆர்.ஜி.பாபு பகுதி கழக செயலாளர் | கே.என்.நேரு நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கழக முதன்மைச் செயலாளர் |
| 9. 25/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் 48.48A பொன்மலை பகுதி | மு.ஜமால் முகமது மா.வரதராஜன் வட்டக் கழக செயலாளர்கள் | உடுமலை தண்டபாணி தலைமைக் கழக பேச்சாளர் |
| 10. 28/02/24 06.00 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண்65.65A கலைஞர் நகர் பகுதி | அ.பன்னீர்செல்வம் எம்.சேகர் வட்ட கழக செயலாளர்கள் | நெல்லை மூர்த்தி தலைமைக் கழக பேச்சாளர் |

**அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.